பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
29 03 2025 **SATURDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சுற்றுச்சூழல் குறித்த தேசிய அளவிலான மாநாட்டை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

2. தீயணைப்புத் துறையை நவீனப்படுத்த குஜராத், ஜார்க்கண்ட் உள்ளிட்ட ஐந்து மாநிலங்களுக்கு ஆயிரத்து 604 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

3. ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த மோதலில் உயிரிழந்த மாநில காவல்துறையைச் சேர்ந்த நான்கு பேரில் மூன்று பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

4. நேபாளத்தில் மன்னராட்சிக்கு ஆதரவாக நடைபெற்ற போராட்டம், வன்முறையாக மாறியதில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

5. ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Manisha Bhanwala** தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

>>>>><<<<

சுற்றுச்சூழல் குறித்த தேசிய அளவிலான மாநாட்டை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

விஞ்ஞான் பவனில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ், உச்சநீதிமன்ற நீதிபதி. விக்ரம்நாத், அரசு தலைமை வழக்கறிஞர் திரு. வெங்கட்ரமணி, தேசிய பசுமை தீர்ப்பாயத் தலைவர் நீதிபதி. பிரகாஷ் ஸ்ரீவஸ்தவா உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத்தை சமாளிக்கும் வகையில் சர்வதேச அளவில் இந்தியா செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றுவது குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

>>>>><<<<

தீயணைப்புத் துறையை விரிவுபடுத்துதல் மற்றும் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ், பீகார், குஜராத், ஜார்க்கண்ட், மஹாராஷ்ட்ரா, கேரளா ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு ஆயிரத்து 604 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையிலான உயர்நிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

2023ஆம் ஆண்டு சிக்கிம் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் மறுகட்டமைப்பு தேவைகளுக்காக 555 கோடி ரூபாயை ஒதுக்கவும் இந்தக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

நாடுமுழுவதும் பேரிடர் நிர்வாகத்தை திறம்பட மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் வகையில் மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளதாகவும் இந்தக் குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, நடப்பு நிதியாண்டில் மாநில பேரிடர் மீட்பு நிதியின் கீழ் 28 மாநிலங்களுக்கு 19 ஆயிரம் கோடி ரூபாயும், மாநில பேரிடர் துயர்துடைப்பு நிதியின் கீழ், 16 மாநிலங்களுக்கு 3 ஆயிரத்து 229 கோடி ரூபாயையும் மத்திய அரசு விடுவித்துள்ளதாகவும் இந்தக் குழு கூறியுள்ளது.

>>>><<<<

பீகார் சட்டப்பேரவைக்கு விரைவில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா இன்று அம்மாநிலத்திற்கு செல்கிறார்.

தலைநகர் பாட்னாவில் பிஜேபி மாநில நிர்வாகிகளுடன் சட்டப்பேரவை தேர்தலுக்கான யுக்தி தொடர்பாக விவாதிக்கவுள்ளார்.

இம்மாநிலத்தில் ஐக்கிய ஜனதா தளம் - பிஜேபி கூட்டணி ஆட்சி நடைபெற்று வரும் நிலையில், வரும் சட்டப்பேரவை தேர்தலில் அதிக இடங்களில் வெற்றிபெற்று ஆட்சியை கைப்பற்றும் வகையில், பிஜேபி கடந்த சில மாதங்களாக கட்சி அமைப்புகளை வலுப்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக திரு. அமித் ஷாவின் பீகார் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

>>>><<<<

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த மோதலில் உயிரிழந்த மாநில காவல்துறையைச் சேர்ந்த நான்கு பேரில் மூன்று பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கத்துவா மாவட்டத்தில் அடர்ந்த வனப்பகுதியில் தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்று இருதரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது.

இம்மாதம் 23ஆம் தேதி ஈராநகர் அருகேயுள்ள சன்னியால் கிராமத்தில் பாதுகாப்புப் படையினருடன் மோதலில் ஈடுபட்ட அதே தீவிரவாத கும்பல், இந்த சம்பவத்திலும் ஈடுபட்டதாக ஜம்முவில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில காவல்துறை தலைமை இயக்குநர் திரு. நளீன் பிரபாத் தெரிவித்தார்.

அன்றைய தினம் பாதுகாப்புப் படையினரிடமிருந்து தப்பிச் சென்ற தீவிரவாதிகளை பிடிப்பதற்காக பாதுகாப்புப்படையினர் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டதாகவும், நேற்று முன்தினம் நிகழ்ந்த கடும் துப்பாக்கிச் சண்டையில் ஜெய்ஸ்-இ-முஹமது தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 2 பேரும், காவல்துறையினர் 4 பேரும் உயிரிழந்தாகவும் அவர் கூறினார்.

இந்த தீவிரவாதிகள் இருவரும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார்.

காவல்துறையைச் சேர்ந்த நான்காவது நபரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதிலும் அந்தப் பகுதியில் உயரமாக மலையில் மறைந்திருந்து தீவிரவாதிகள் இரண்டு பேர் துப்பாக்கியால் தாக்குதல் நடத்தி வருவதால் அந்த சடலத்தை மீட்க முடியவில்லை என்றும் திரு. நளீன் பிரபாத் கூறினார்.

>>>>><<<<

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா இன்று ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் இளையோர் மற்றும் வேலைவாய்ப்பு தின நிகழ்ச்சியை தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா கலந்து கொண்டு, மாநிலத்திற்கான திறன் மேம்பாடு மற்றும் இளையோர் கொள்கையை வெளியிடவுள்ளார்.

>>>>><<<<

இந்தியாவில் உயர்கல்வித்துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறித்த தேசிய அளவிலான பயிலரங்கம் சென்னையில் இன்று நடைபெறவுள்ளது.

சென்னை ஐஐடி வளாகத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சிக்கு நித்தி ஆயோக் ஏற்பாடு செய்துள்ளது.

இந்தியா மற்றும் சர்வதேச அளவிலான 30 முன்னணி பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், அரசு உயரதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

கல்வித் துறையில் சர்வதேசமயமாக்கல் அதிகரித்து வரும் நிலையில், எழுந்துள்ள சவால்கள், சிறந்த நடைமுறைகள், உயர்கல்விக்கான கொள்கை வகுப்பதில் அரசின் தலையீடுகள் குறித்து இந்த பயிலரங்கில் விவாதிக்கப்படவுள்ளது.

>>>>><<<<

அமெரிக்காவுடனான உக்திசார் ஒத்துழைப்பின் அவசியத்தை இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச்செயலராக நியமிக்கப்பட்டுள்ள திரு. கிறிஸ்டோபர் லாண்டா-வுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள இந்திய வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, இருதரப்பு வர்த்தகம், பாதுகாப்பு, தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து அவருடன் விவாதித்தார்.

பரஸ்பரம் ஆர்வமுள்ள துறைகள் தொடர்பாக இருதரப்பினரும் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்த ஒப்புக் கொண்டனர்.

அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச் செயலர் திரு. கிறிஸ்டோபர் லாண்டாவை விரைவில் இந்தியாவிற்கு வருகை தருமாறும் திரு. விக்ரம் மிஸ்ரி அழைப்பு விடுத்தார்.

>>>>><<<<

மியான்மரில் நேற்றிரவு மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது, அது ரிக்டர் அளவையில் 4 புள்ளி இரண்டாக பதிவானது.

இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை

முன்னதாக நேற்று பகல் நேரத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை 200 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தேசிய நெடுஞ்சாலைகள் சேதமடைந்துள்ளன.

பழமையான புத்த மடாலயங்கள் இடிந்துள்ளன.

நிலநடுக்கத்தை அடுத்து, அடிக்கடி நில அதிர்வு ஏற்படுவதால் பொதுமக்கள் தொடர்ந்து அச்சத்தில் உள்ளனர்.

இந்நிலையில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மர் நாட்டிற்கு 15 டன் நிவாரணப் பொருட்களை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

>>>>><<<<

சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ், திருவள்ளூர் மாவட்டத்தில் ராணுவ தளவாட உற்பத்திக்கான உதிரிப் பாகங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

சர்வதேச தரத்தில் இவை உற்பத்தி செய்யப்படுவதாக தனியார் நிறுவன உரிமையாளர் திரு. சந்திரசேகரன் கூறியுள்ளார்.

(சவுண்ட்பைட — சந்திரசேகரன் 42 செகண்ட்ஸ்)

>>>>><<<<

நேபாளத்தில் மன்னராட்சிக்கு ஆதரவாக நடைபெற்ற போராட்டம், வன்முறையாக மாறியதில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

பத்திரிகையாளர் ஒருவரும் இந்த வன்முறையின் போது உயிரிழந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து நேபாளத்தில் முக்கியமான பகுதிகளில் ராணுவம் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளது.

சில பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ராஷ்ட்ரிய பிரஜா தந்ரா கட்சியைச் சேர்ந்தவர்கள் மீண்டும் நேபாளத்தில் மன்னராட்சியை நிறுவ வேண்டும் என்று போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நேபாள அரசுக்கு எதிராக வன்முறையை தூண்டிவிட்டதாக இக்கட்சியைச் சேர்ந்த இரண்டு மூத்த தலைவர்களை நேபாள காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

>>>>><<<<

ஜோர்டான் தலைநகர் அம்மானில் நடைபெற்ற ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Manisha Bhanwala** முதலாவது தங்கப்பதக்கத்தை வென்றார்.

2021ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்திய வீராங்கனை ஒருவர் தங்கப்பதக்கம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.

நேற்று நடைபெற்ற மகளிர் 62 கிலோ எடைப்பிரிவு இறுதிப்போட்டியில் அவர் 8 — 7 என்ற புள்ளிக்கணக்கில் கொரியாவின் **Ok J Kim**—ஐ வென்றார்.

53 கிலோ எடைப்பிரிவு வெண்கலப்பதக்கத்திற்கான போட்டியில் **Antim Banghal** ஒரு புள்ளியைக்கூட விட்டுக் கொடுக்காமல் சிறப்பாக விளையாடி சீன தைபேயின் **Meng H Hsieh**-யை வென்றார்.

இப்போட்டியில் இதுவரை இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஆறு வெண்கலப்பதக்கதங்கள் என எட்டு பதக்கங்களை வென்றுள்ளது.

ஆடவருக்கான ஃப்ரீ ஸ்டைல் மல்யுத்தப் போட்டிகள் இன்று தொடங்குகிறது.

>>>>END<<<<